செய்தி வெளியீடு எண் : 468 நாள் : 06.03.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரி சார்பாக நடைபெற்ற விழாவில் காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்றமைக்காக அர்ஜுனா விருதுபெற்ற செல்வி.ஜெ.ஜெர்லின் அனிகா அவர்களை பாராட்டி கல்லூரி நிர்வாகம் சார்பாக ரூபாய் 1 இலட்சம் ஊக்கத்தொகைக்கான காசோலையை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (06.03.2023) மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் நடைபெற்ற விழாவில் காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்றமைக்காக அர்ஜுனா விருதுபெற்ற செல்வி.ஜெ.ஜெர்லின் அனிகா அவர்களை பாராட்டி கல்லூரி நிர்வாகம் சார்பாக ரூபாய் 1 இலட்சம் ஊக்கத்தொகைக்கான காசோலையை வழங்கினார். மேலும், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற செல்வி.வி.ரேவதி, தேசிய அளவில் போல் வால்ட் போட்டியில் பரிசு வென்ற செல்வி.பி.ரோஸி மீனா ஆகியோர்களையும் பாராட்டி கேடயம் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:–

தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் மூலம் இளைஞர்களின் தனித்திறனை மேம்படுத்தி சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற ஊக்குவித்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பணியாற்ற எனக்கு வாய்ப்பு வழங்கியுள்ளார்கள். அந்த வகையில், தமிழகத்தில் இளைஞர்களை ஊக்குவித்திடும் வகையில் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் திட்டங்களை தொடர்ந்து துரிதமாக செயல்படுத்தி வருகின்றோம். ஆசிய கோப்பைக்கான ஹாக்கி போட்டி, உலக ஸ்குவாஷ் போட்டி போன்ற போட்டிகள் சென்னையில் நடத்தப்பட உள்ளன.

மதுரை டோக் பெருமாட்டி கல்லூரி கடந்த 75 வருடங்களாக எண்ணற்ற பெண் குழந்தைகளின் உயர்கல்வி பெற்று பயன்பெறும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணவிகள் கல்வி மட்டுமல்லாது விளையாட்டு துறையிலும் சிறப்பாக செயல்படுகின்றனர். குறிப்பாக, பொருளாதாரம் பயிலும் மாணவி செல்வி.ஜெ.ஜெர்லின் அனிகா அவர்கள்,

2022–ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்று தமிழகத்திற்கும், இந்திய தேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு இந்திய அரசு அர்ஜுனா விருது வழங்கி கௌரவித்துள்ளது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய விஷயமாகும்.

அதேபோல, செல்வி. பி.ரோஸி மீனா, போல்வால்ட் போட்டியில் தேசிய அளவில் பதக்கம் வென்றுள்ளார். செல்வி. வி.ரேவதி, இந்திய தடகள அணியில் இடம்பெற்று ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ளார். இவர்களது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அவர்களது பயிற்சியாளர்கள், ஊக்கப்படுத்திய பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களின் வெற்றி எண்ணற்ற பெண் குழந்தைகளுக்கும், மகளிருக்கும் ஊக்கமளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த விழாவில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கலவித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அதுல்யா மிஸ்ரா அவர்கள், தமிழ்நாடு விளையட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் / செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.தளபதி அவர்கள், டோக் பெருமாட்டி கல்லூரி முதல்வர் மற்றும் செயலாளர் டாக்டர். கிறிஸ்டியானா சிங் அவர்கள், துணை முதல்வர் டாக்டர்.ஆர்.பியூலா ஜெயஸ்ரீ அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in